தினமணி

**பீர்க்கன்காய் பயிரில் லாபம் ஈட்டும் விவசாயிகள்**

First Published : 17 Jun 2010 12:31:56 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 16: உளுந்தூர்பேட்டை அருகே தோட்டப் பயிரான பீர்க்கன்காய் பயிரிட்டு விவசாயிகள் லாபம் ஈட்டி வருகின்றனர். உளுந்தூர்பேட்டை வட்டம் சேந்தநாடு, மட்டிகை, தொப்பையான்குளம், ஆண்டிக்குழி, விருத்தாசலம் வட்டம் பூண்டியாங்குப்பம், மோகாம்பரிக்குப்பம், இருளக்குறிச்சி, மணக்கொல்லை, புதுப்பேட்டை உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாகற்காய், புடலங்காய், பீர்க்கன்காய் உள்ளிட்ட காய்களை பயிர் செய்து வருகின்றனர்.

÷இதில் ஊடு பயிரான பீர்க்கன்காய் விவசாயத்தில் ஏக்கருக்கு 10 டன் முதல் 12 டன் வரை மகசூல் கிடைக்கிறது. டன் ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் வரை விலை கிடைக்கிறது. ஆக ஒரு ஏக்கர் பீர்க்கன்காய் பயிர் செய்தால் செலவு போக ரூ. 1.40 லட்சம் வரை லாபம் கிடைக்கிறது.

பயிரிடும் முறை: நிலத்தை மூன்று (அ) நான்கு முறை புழுதிப்பட உழுது கொள்ள வேண்டும். அதில் 5 அடி தூரம் இடைவெளி விட்டு ஒரு அடி ஆழத்துக்கு குழி தோண்டிக் கொள்ள வேண்டும். பின்னர் குழிக்கு தொழுவுரம் (மக்கிய குப்பை), 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் பொட்டாஷ், 25 கிராம் யூரியா, 100 கிராம் வேப்பம்  புண்ணாக்கு ஆகியவற்றை அடியுரமாக இடவேண்டும். பின்னர் அந்த குழிகளில் விதை ஊன்றி நீர் ஊற்றி வரவேண்டும்.

÷25-வது நாளில் குழிக்கு 50 கிராம் யூரியா, 25 கிராம் பொட்டாஷ் இடவேண்டும். இந்தப் பயிருக்கு வாரம் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். இப்பயிரில் நோய் தாக்கும் தன்மை குறைவு.செடி முளைத்து ஒரு குறிப்பிட்ட உயரம் வளர்ந்தவுடன் கழிகள் நட்டு அதில் கம்பிகளை இழுத்து கட்டி பந்தல் அமைக்கவேண்டும். அவ்வாறு செய்த பின்னர் வளர்ந்த கொடிகள் அந்த பந்தலின்மேல் 50-வது நாளிலிருந்து காய்க்கத்  தொடங்கிவிடும். அதிலிருந்து பீர்க்கன்காயை வாரத்துக்கு  இருமுறை பறித்துகொண்டு இருக்க வேண்டும்.

÷ஊடு பயிரான பீர்க்கன்காயை சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர் செய்ய விவசாயிகள் முன் வந்தால், இலவசமாக விதை வழங்குவதுடன் தோட்டக்கலைத்துறை மூலம் அரசு 60 சதவீதம் மானியம் வழங்குவதாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயன்கள்: பீர்க்கன்காயில் இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் உள்ளிட்ட சத்துகள் உள்ளன. இரும்புச் சத்து ஹீமோகுளோபின் உற்பத்திக்கும், கால்சியம், பாஸ்பரஸ் எலும்பு வளச்சிக்கும் பயன்படுகிறது. பீர்க்கன்காயின் இலை, காய் மற்றும் வேரில் மருத்துவ குணங்கள் உள்ளன. பீர்க்கன்காயில் பொரியல் செய்வதோடு ஊறுகாய் போடவும் செய்யலாம்.

**வளம் தரும் இயற்கை மூலிகை கிணறு**

First Published : 17 Jun 2010 12:31:21 AM IST

சிதம்பரம், ஜூன் 16: விவசாயிகள் தங்களிடம் உள்ள வேளாண் இடு பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை விவசாய உற்பத்தி முறைக்கு நல்ல வரவேற்பு தருகின்றனர்.

வட மாநிலங்களிலும், தமிழகத்தில் சில பகுதிகளிலும் இயற்கை முறையில் அதிக உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் அதிக மகசூல் பெற்றுத் தரும் இயற்கை மூலிகை கிணறு பற்றி விவசாயிகள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

÷இயற்கை மூலிகை கிணறு: கிராமங்களில் வயல்களில் மற்றும் தோட்டங்களில் நீர் பாசனத்துக்கு பயன்படும் கிணறுகள் இருக்கும். இத்தகைய கிணறுகளை இயற்கை மூலிகை கிணறுகளாக மாற்றி பலர் குறைந்த செலவில் அதிக லாபம் பெற்று வருகின்றனர். இந்த புதிய சாகுபடி முறையில் விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் உள்ள கிணற்றை விவசாயத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இக்கிணற்றில் மாட்டு சாணம், எரு, நொச்சி, வேப்பந்தழை மற்றும் பிற மருத்துவ குணம் கொண்ட மூலிகைகள், ஆட்டு கழிவுகள், கோழி எரு போன்றவை கொட்டப்பட்டு நீண்ட கம்புகள் கொண்டு நன்றாக கலக்கப்படுகிறது.பின்னர் முதலில் ஒரு வாரம் கழித்து மோட்டார் வாயிலாக நீர் பாசனம் செய்யும் போது தண்ணீரில் கலந்த இயற்கை உரங்கள் எளிதாக பயிறுக்கு சென்று சேருகிறது.

÷இந்த முறை வாயிலாக வயல்கள், தோட்டங்களுக்கு ஆண்டு முழுவதும் இயற்கை உரமிட முடியும். பின்னர் கோடைக் காலங்களில் நீர் நிலைகளில் தண்ணீர் குறையும் போது விவசாயிகள் கிணறுகளில் இறங்கி தூர்வாரி, சுத்தம் செய்து கிணற்றின் அடியில் உள்ள கால்நடை கழிவுகளை எடுத்து கோடை உழவின்போது பயன்படுத்தும் முறை நடைமுறையில் உள்ளது.

நொச்சி, வேப்பந்தழை போன்ற மருத்துவ குணம் கொண்ட தழைகளும் பயன்படுத்தப்படுவதால் பயிர்களை நோய் மற்றும் பூச்சித் தாக்குதலில் இருந்து பாதுகாக்க முடிகிறது. விவசாயிகள் இணைந்து செயல்படும் போது இயற்கை மூலிகை கிணறு வாயிலாக நீர் பாசனம் செய்து பலர் எளிதாக பயன் பெற முடியும்.

பிற பயன்கள்: மூலிகைகள் மற்றும் மருத்துவ குணம் கொண்ட தழைகள் பயன்படுத்துவதால் பயிர் பாதுகாப்புக்கு குறைந்த செலவே போதுமானது.

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் விளை பொருள்களுக்கு பெரு நகர்களில், வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ள காரணத்தால் அதிக விலைக்கு தங்களின் விலை பொருள்களை விற்பனை செய்ய முடியும். இயற்கை மூலிகை கிணறு வாயிலாக விவசாயிகளின் மண், தண்ணீர் நல்ல வளமுடன் இருக்கும்.

÷எனவே குறைந்த செலவில் அதிக லாபம் பெற்றுத் தரும் மூலிகைக் கிணறு வாயிலாக தமிழக சிறு மற்றும் குறு விவசாயிகள், சுய உதவிக்குழு உறுப்பினர், முன்னோடி விவசாயிகள் கிராம அளவில்

இணைந்து செயல்பட்டால் வாழ்வில் வளம் பெற முடியும் என்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**உணவுப் பணவீக்கம் மேலும் உயரும்: மான்டேக் சிங் அலுவாலியா தகவல்**

First Published : 17 Jun 2010 01:08:48 AM IST

புது தில்லி, ஜூன் 16: நாட்டின் உணவுப் பணவீக்கம் வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் என்று மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக்  சிங் அலுவாலியா தெரிவித்தார். அவ்விதம் உயர்வதால் அச்சப்படத் தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

மே 29-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவுப் பணவீக்கம் 16.74 சதவீதமாக உயர்ந்துள்ளது.

÷ஜூன் முதல் வாரத்தின் உணவுப் பணவீக்க விகிதம் வியாழக்கிழமை வெளியாக உள்ளது. அப்போது இன்னும் அதிகமாக இருக்கும். இதுகுறித்து கவலைப்படத் தேவையில்லை. இது அடுத்த சில வாரங்களுக்குப் பிறகு படிப்படியாகக் குறையும் என்று அவர் மேலும் கூறினார்.

÷கடந்த ஆண்டு உணவுப் பணவீக்க விகிதம் மிகக் குறைவாக இருந்தது. கடந்த ஆண்டு குறைவாக உயர்ந்திருந்த உணவுப் பொருள்களின் விலை தற்போது மிக அதிகம் உயர்ந்துள்ளது. உணவுப் பணவீக்கம் அதிகரித்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

÷கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப் போனதால் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்தது. அரிசி, சர்க்கரை விலை கடுமையாக உயர்ந்ததால் சாமானிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

நாட்டில் 80 சதவீத விளைநிலங்களில் 60 சதவீதம் மழையை நம்பியுள்ளவையாகும். இதனால் கடந்த டிசம்பரில் உணவுப் பணவீக்கம் 20 சதவீதத்தைத் தொட்டது. பின்னர் படிப்படியாகக் குறைந்து 16 சதவீதத்துக்கு வந்துள்ளது. உணவுப் பணவீக்கத்தைக் குறைக்கும் காரணிகளில் மிக முக்கியமானது பருவ மழையாகும். இதனால் உற்பத்தி பெருகி உணவுப் பொருள்களின் விலை குறையும் என்று மான்டேக் குறிப்பிட்டார்.

÷வெளிச் சந்தையில் கடன் திரட்டும் அரசின் முடிவால் பணப் புழக்கம் குறையாது. இதனால் தனியார் நிறுவனங்களுக்கு கடன் கிடைப்பதில் சிரமம் இருக்காது. 3-ஜி அலைக்கற்றை லைசென்ஸ் பெறுவதற்கும், நிறுவனங்கள் முன்கூட்டியே வரி செலுத்தியதாலும் பணப்புழக்கம் குறைந்துவிட்டதாகக் கூறப்படுவது சரியல்ல என்றும் அவர் கூறினார்.

÷நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசு வெளிச்சந்தையில் ரூ. 4.57 லட்சம் கோடி கடன் பெற உத்தேசித்துள்ளது. அத்துடன் 3-ஜி அலைக்கற்றை லைசென்ஸ் தொகை மற்றும் பிராட்பேண்ட் சேவை ஆகியவற்றுக்கான லைசென்ஸ் தொகை ரூ. 1.50 லட்சம் கோடி செலுத்தப்பட்டுள்ளது. இத்துடன் காலாண்டுக்கு முன்கூட்டியே வரியையும் நிறுவனங்கள் செலுத்தியுள்ளன. இதனால் பணப்புழக்கம் வெகுவாக குறைந்துள்ளது.

÷பணவீக்கம் முழுமையான கட்டுக்குள் இருப்பதாகவும் நடப்பு நிதி ஆண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதமாகக் குறையும் என்றும் அலுவாலியா கூறினார்.

**மா-வில் பறவைக்கண் நோய்த் தாக்குதல் நஷ்டத்தால் விவசாயிகள் வேதனை!**

First Published : 16 Jun 2010 12:23:44 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 15: மா-வில் அதிக அளவில் பறவைக்கண் நோய்த் தாக்குதல் காணப்படுகிறது. இதனால், காய் முதிர்ச்சி அடையும் முன்பே விவசாயிகள் அறுவடை செய்வதால், விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

தமிழகத்தில் மதுரை, தேனி, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் சுமார் 80 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுள்ளது.

இதில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 3 லட்சம் டன் மாங்காய் உற்பத்தி செய்யப்பட்டது. பருவ நிலை மாறுதலால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நடப்பாண்டில் 20 சதவீதமே உற்பத்தி இருக்கும் என வேளாண் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செந்தூரா, நீலம், பெங்களூரா என அழைக்கப்படும் கோத்தாபுரி போன்ற ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்நிலையில், மதுரை, தேனி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மா-வில் அழுகல் நோய் என அழைக்கப்படும் பறவைக்கண் நோய்த் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இந்த நோய் கோத்தாபுரி ரகத்தில்தான் அதிக அளவில் உள்ளது. கிருஷ்ணகிரி மாம்பழச் சந்தையில் கோத்தாபுரி ரகம் கடந்த ஆண்டு 1 டன் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை விலை போனது. ஆனால், நடப்பாண்டில் 1 டன் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.17 ஆயிரம் வரை விற்பனையாகிறது.

காய்கள் முதிர்ந்து நல்ல எடை பிடிக்கும் காலத்தில் இந்நோய்த் தாக்குவதால்,விவசாயிகள் காய் முதிர்ச்சி அடைவதற்கு முன்பே அறுவடை செய்யத் தொடங்கியுள்ளனர். இதனால் குறைந்த விலையே கிடைப்பதால், விவசாயிகள் பெருமளவு நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 50-க்கும் மேற்பட்ட மாம்பழக் கூழ் உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. கோத்தாபுரி ரகத்திலிருந்துதான் அதிக மாம்பழ கூழ் உற்பத்தி செய்யப்படுகிறது.

பறவைக்கண் நோய்த் தாக்குதல் இருப்பதால் தொழிற்சாலைகளுக்கு மாம்பழ வரத்து குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நோயைத் தடுப்பது எப்படி?

இந்நோயை கட்டுப்படுத்தும் முறை குறித்து பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய நோயியல் துறை உதவி பேராசிரியர் கி.கல்பனா கூறியது:

மா தோட்டங்களில் நோய் தாக்கப்பட்ட கிளைகள், கிழே விழுந்த இலைகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றைச் சேகரித்தும், கவாத்து செய்தும் அழித்துவிட

வேண்டும்.

மா முதிர்ச்சியடையும் தருணத்தில் பாலிக்கர் 10 மில்லி லிட்டரில் 100 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது ரோக்கோ ஒரு கிராமை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் உயிரியல் பாக்டீரியா கொல்லி, சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் பி.எப். 1, எப்.பி. 7 துகள் 5 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு மாத இடைவெளியில் (அக்டோபர் மாதம் முதல்) 6 முறை தெளிப்பதன் மூலம் பறவைக் கண் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் என்றார்.

**காரைக்கால் பண்ணையில் கூண்டு, குட்டை முறையில் கொடுவா மீன் வளர்ப்பு குறித்து பயிற்சி**

First Published : 16 Jun 2010 12:01:00 PM IST

காரைக்கால், ஜூன் 15: கூண்டு, குட்டை மூலம் கொடுவா மீன் வளர்ப்பு, பராமரிப்பு, லாபம் குறித்து செயல் விளக்கத்துடன் கூடிய பயிற்சி காரைக்கால் மீன் வளர்ப்புப் பண்ணையில் அளிக்கப்பட்டது.

காரைக்கால் மாவட்டம், கருக்களாச்சேரி அருகே மத்திய அரசின் ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம் இயங்கி வருகிறது. நாகை மாவட்டம் சீர்காழி பகுதியில் உள்ள இம்மையத்தின் தலைமையகத்திலிருந்து மீன், நண்டு குஞ்சுகள் கொண்டுவரப்பட்டு, இங்கு வளர்ப்பதும், பயிற்சி அளிப்பதும் செய்யப்படுகிறது.

பரங்கிப்பேட்டை, கில்லை பகுதிகளில் இருந்து தலைமையகத்தால் அனுப்பப்பட்ட 11 பெண்கள் உள்பட 20 பேருக்கு கொடுவா மீன் வளர்ப்பு முறைகள் குறித்து ஒரு நாள் நேரடி செயல்விளக்கப் பயிற்சி முகாம் திங்கள்கிழமை காரைக்கால் பண்ணையில் நடைபெற்றது.

குட்டையிலும், கூண்டு முறையிலும் கொடுவா மீன் வளர்ப்பு செய்வது எப்படி, மீன்களுக்கு உணவு தருவது, பராமரிப்பு, அறுவடை காலம் வரை கண்காணிக்க வேண்டிய முறைகள் குறித்து பண்ணை நிர்வாகிகள் விளக்கிக் கூறினர்.

பயிற்சி குறித்து காரைக்கால் பண்ணையின் உதவி திட்ட மேலாளர் கே.கணேஷ் கூறியது:

ஏழு மாதங்கள்வரை வளரக் கூடியது கொடுவா மீன். சுமார் ஒன்றரை கிலோ வரை வளர்ந்த பிறகு அறுவடை செய்யலாம். மார்க்கெட் விற்பனையில் இது கிலோ ரூ. 250-க்கு விற்கப்படுகிறது. சீர்காழி குஞ்சு பொறிப்பகத்திலிரு0ந்து தேவைப்படும் அளவுக்கு கொடுவா மீன் குஞ்சுகள் தரப்படுகின்றன. தீவனம் மும்பையிலிருந்து வரவழைத்து தரமுடியும்.

கொடுவா மீனை கூண்டு முறையிலும், குட்டை முறையிலும வளர்க்கலாம். ஒரு கூண்டில் 60 கிலோ வரை மீன்கள் வளர்க்கமுடியும். 2 கிராம் எடையுள்ள மீன் குஞ்சு கூண்டு முறையில் விடப்பட்டு, அது 7 மாத வாக்கில் ஒன்றரை கிலோவாக வளர்கிறது. 100 கிராம் எடை வந்த பிறகு கூண்டிலிருந்து எடுத்து குட்டையில் விட்டும் வளர்க்கலாம். காரைக்காலில் உள்ள வளர்ப்புப்

பண்ணையில் 2 ஏக்கரில் 2 டன் அளவுக்கு மீன்கள் வளர்கிறது. தற்போது 300 கிராம் என்றளவில் வளர்ச்சி உள்ளது.

கூண்டு தயார் செய்துத் தர நிறுவனங்கள் பல உள்ளன. இதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்துத் தருகிறோம். வெளிநாடுகளில் குட்டை வைத்து மீன்வளர்க்க போதிய இடம் இல்லாததால், ஆற்றில் கூண்டு கட்டி கொடுவா மீன் வளர்க்கிறார்கள். இந்த திட்டம் நம் நாட்டில் இன்னும் அமலுக்கு வரவில்லை.

தற்போது கூண்டு மூலம் மீன் வளர்ப்பு என்பதை இந்த மையம் மட்டுமே செய்து வருகிறது. பயனற்று உள்ள நிலப்பரப்பில் கொடுவா மீன் வளர்ப்பு செய்யும்போது, சிறந்த வருவாயை எட்ட முடியும். அதற்கான பல்வேறு ஆலோசனைகள், உதவிகள் செய்ய இம்மையம் தயாராகவுள்ளது என்றார் கணேஷ். இவருடன் பண்ணை நிர்வாகிகளான ஜான்சாமுவேல், குணசேகரன், சுந்தரேசன், ராமு உள்ளிட்டோர் குழுக்களுக்கு பயிற்சி அளித்தனர்.

**"நிலத்தை விற்றுவிட்டு அவதிப்படும் விவசாயிகள்'**

First Published : 16 Jun 2010 10:00:03 AM IST

புதுச்சேரி, ஜூன் 15: தனியார் பள்ளி, கல்லூரிகள், ரியல் எஸ்டேட்காரர்களுக்கு என்று நிலத்தை விற்றுவிட்டு இப்போது விவசாயிகள் அவதிப்பட்டு வருவதாக புதுச்சேரியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கவலை தெரிவிக்கப்பட்டது.

இயற்கை வேளாண் இணையம் என்ற அமைப்பு சார்பில் புதுச்சேரி பல்நோக்கு சமூகப் பணி மையத்தில் உயிர்ச் சூழல் வேளாண் மற்றும் பருவ நிலை மாற்றம் என்னும் தலைப்பில் செவ்வாய்க்கிழமை கருத்தரங்கு நடந்தது.

இதில் தலைமையுரையாற்றிய பல்நோக்கு சமூக சேவா சங்கத்தின் இயக்குநர் வ.ஆல்பர்ட் தம்பிதுரை, விவசாய நிலங்கள் கைமாறிக் கொண்டிருக்கின்றன. விவசாயிகளைப் பெரிய அளவில் ஒன்று திரட்டி வாக்கு வங்கியாக அவர்களைப் பலப்படுத்த வேண்டும். அப்போதுதான் அரசாங்கம் விவசாயிகளைத் திரும்பிப் பார்க்கும் என்றார்.

திருச்சி வாய்ஸ் அறக்கட்டளையின் திட்ட இயக்குநர் அ.கிரகோரி பேசுகையில், விளை நிலங்கள் பள்ளி, கல்லூரி, கம்பெனிகளுக்கு என்று விவசாயிகள் விற்றுவிட்டு இப்போது அவதிப்பட்டு வருகின்றனர் என்றார்.

திருவண்ணாமலையைச் சேர்ந்த கே.வி.சைலஜா பேசுகையில், திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள நிலங்களை விவசாயிகள் தியான மண்டபங்கள் கட்டுவதற்கும், பள்ளி, கல்லூரிகள் கட்டுவதற்கும் விற்பனை செய்துவிட்டு இப்போது தங்கள் நிலங்களில் எழும்பியுள்ள கட்டடங்களில் வாட்ச்மேனாக பணியாற்றும் விவசாயிகளும் இருக்கிறார்கள் என்றார்.

எழுத்தாளர் பவா செல்லதுரை பேசுகையில், தமிழ் இலக்கியங்களும், தமிழ் சினிமாவும் இதுவரை உண்மையான விவசாயத்தைப் பதிவு செய்யவில்லை. ஒரு சில சினிமாவில் செழிப்பான வயல்வெளிதான் காட்சிப்படுத்தப்படுகிறது. அது போன்று விவசாயம் இல்லை. நம்முடைய பாரம்பரிய தானியங்கள் இப்போது பயிரிடப்படுவதில்லை. கோழி வளர்ப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இப்போது விவசாயிகளிடம் இல்லை.

அதற்கு முன்பு வயலுக்குத் தேவையான தழைச் சத்துக்கு செடி, கொடி, மரங்களிலிருந்து உரம் போட்டு விவசாயம் செய்து வந்தோம். இப்போது உரம் என்ற பெயரில் நிலத்தை நச்சுத் தன்மை மிக்கதாக மாற்றி வருகிறோம் என்றார்.

தேனியைச் சேர்ந்த கிரின் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த பி.எஸ்.போஸ் பேசுகையில், இப்போது எங்கள் பகுதியில் பல விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு மாறி வருகின்றனர். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலையும் இப்போது கிடைக்கிறது. ஏற்கெனவே நிலத்தை விற்றுவிட்ட விவசாயிகள் இப்போது அவதிப்படுகின்றனர் என்றார்.

தினமலர்

**தொடர்ந்து உயரும் மஞ்சள் விலை நடவுப்பணியில் விவசாயிகள் ஆர்வம்**

ஆத்தூர்: மஞ்சள் விலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருவதால், ஆத்தூர் சுற்றுவட்டார விவசாயிகள் ஆர்வத்துடன் நடவு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆத்தூர், தலைவாசல், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், ஆண்டுதோறும் மஞ்சள் பயிரிடப்படுகிறது.

இந்தாண்டு, தங்கத்தை விஞ்சும் வகையில் மஞ்சள் விலை உயர்ந்துள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் துவங்கிய முதல் ஏலத்தில், குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்த வாரத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய் என உயர்ந்தது. ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் குவிண்டால் 16 ஆயிரத்து 330 வரை விற்றது. மூன்று வாரமாக, மஞ்சள் குவிண்டால் 16 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் உள்ளது. மஞ்சள் விலை உயர்ந்துகொண்டே வருவதால், ஆத்தூர் பகுதி விவசாயிகள், கிணற்று பாசனத்தை பயன்படுத்தி, மஞ்சள் நடவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆத்தூர் மஞ்சள் விவசாயி சுந்தரம் கூறியதாவது: வைகாசி பட்டத்தில் மஞ்சள் பயிர் செய்யப்படும். போதிய பருவ மழையில்லாததால் கிணற்று பாசனத்தை பயன்படுத்தி, நடவு பணிகளில் ஈடுபட்டுள்ளோம். ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தால் 20 மூட்டை மஞ்சள் கிடைக்கும். மஞ்சள் விலை அதிகம் உள்ளதால், விதை மஞ்சள் பயிர் செய்யும் பணிகளை செய்கிறோம். கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பயிரிடுவது தாமதமாகிறது, என்றார்.

**மூலனூரில் ரூ. 27 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

மூலனூர்: மூலனூர் விற்பனை கூடத்தில் 27 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது. திருப்பூர், கோவை, அன்னூர், புளியம்பட்டி, பல்லடம், சூலூர், சேலம் மாவட்டம் மகுடஞ்சாவடி ஆகிய பகுதிகளை சேர்ந்த பருத்தி வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

மூலனூர், புதுப்பை, பட்டுத்துறை, ஒட்டன்சத்திரம், வெள்ளகோவில், தாராபுரம் பகுதியில் இருந்து 2,200 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர். எல்.ஆர்.ஏ., ரக பருத்தி குவிண்டாலுக்கு 3,000 முதல் 3,750 ரூபாய் வரையிலும், இரண்டாவது ரகம் 1,800 முதல் 2,850 ரூபாய் வரையிலும் ஏலம் போனது. மொத்தம் 27 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடந்தது. சென்ற வாரத்தை விட பருத்தி வரத்து குறைவாகவே இருந்தது. இத்தகவலை மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ராஜாமணி தெரிவித்தார்.

**நெல் ஆராய்ச்சி நிலையத்துக்கு வேளாண் பல்கலை சிறப்பு விருது வழங்கல்**

கும்பகோணம்: ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் சிறந்த ஆராய்ச்சி நிலையத்துக்கான விருதை பெற்றுள்ளது. கும்பகோணம் அருகே ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் சிறந்த ஆராய்ச்சி நிலையத்துக்கான விருதை அதன் தலைமையிடமான கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வழங்கி சிறப்பித்துள்ளது.

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 36 ஆராய்ச்சி நிலையங்கள், பத்து கல்லூரிகள், 14 வேளாண் அறிவியல் நிலையங்கள் செயல்படுகிறது. இதில், முக்கியமான ஆராய்ச்சி நிலையமாக ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் நெல் மற்றும் நெல் தரிசு பயிர்களில் ஆராய்ச்சிகள் மற்றும் விரிவாக்க பணிகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதுவரை இந்நிலையத்தில் இருந்து 48 நெல் ரகங்களையும், நெல் தரிக்கேற்ற ஐந்து உளுந்து ரகங்களையும், மூன்று பச்சை பயறு ரகங்களையும், சோயா மற்றும் பருத்தியில் தலா ஒரு ரகத்தையும் வெளியிட்டுள்ளது. இத்துடன் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில் நுட்பங்களை தொடர்ந்து அளித்து வருகிறது. பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் ஆராய்ச்சி நிலையங்களில் சிறந்த ஆராய்ச்சி நிலைய விருதினை கடந்த ஜூன் ஒன்றாம் தேதி கோவையில் நடந்த 40ம் ஆண்டு பல்கலைக்கழக நிறைவு விழாவில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் தங்கராஜு, ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குர் ஜெயராஜிடம் விருதினை வழங்கினார். வேளாண் துணைவேந்தர் முருகேச பூபதி, வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**நாமக்கல் சுற்றுவட்டாரத்தில் மழை விவசாய பணிகள் விறுவிறுப்பு**

நாமக்கல்: நாமக்கல் பகுதியில் ஏற்பட்ட மழைப்பொழிவை தொடர்ந்து, விவசாயிகள் நடவு பணிகளுக்கு ஆயத்தமாகி வருகின்றனர். நாமக்கல் அதன் சுற்றுவட்டாரத்தில் கடந்த வாரம் பரவலாக தென்மேற்கு பருவமழை பொழிவு ஏற்பட்டது. இம்மழை பொழிவை தொடர்ந்து விவசாயிகள் நடவு பணிகளுக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

விளை நிலங்களில் தண்ணீர் தேக்கி நாற்றுவிடுதல் மற்றும் உழவு ஓட்டி நிலத்தை பண்படுத்துதல் போன்ற பணிகள் தீவிரமாகியுள்ளது. தவிர, நிலத்தில் நடவு செய்யும் பயிர்களுக்கு தேவையான இயற்கை உரங்களை விளைநிலத்தில் இடும் பணியையும் விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். செம்மறி ஆடுகளை விளைநிலத்தில் அடைத்து வைத்து, இயற்கை முறையில் நிலத்தை உரப்படுத்தி வருகின்றனர். விளைநிலத்தில் ஆடுகளை அடைத்து வைக்க, குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்கின்றனர். நாமக்கல்லை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: விளைநிலத்தில் பயிர் நடவுக்கு முன் தழைச்சத்துக்காக செடிகள் வளர்த்து அவை உழவு ஓட்டப்படும். ஆட்டுச்சாணம், சிறுநீர் போன்றவை பயிர்களுக்கு சிறந்த உரம் என்பதால், உழவு ஓட்டப்பட்ட விளைநிலத்தில் ஆடுகள் அடைத்து வைக்கப்படுகின்றன, என்றனர்.

**விவசாயிகள் குறைகேள் பதிவேடு அறிமுகம்**

நாமக்கல்: "வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் குறைகேள் பதிவேடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல் வட்டாரத்தில் விவசாயிகளின் குறைகளை களைவதற்காக விவசாயிகள் குறைகேள் பதிவேடு பராமரிக்கப்பட்டு ருகிறது. விவசாயிகள் வேளாண் சம்பந்தமான தொழில் நுட்ப பிரச்னைகள், சந்தேகங்களையும், விதை, நுண்ணூட்டம் உயிர் உரம், ஜிப்சம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவற்றின் இருப்பு விபரங்களையும், மானிய திட்டங்கள் குறித்த விபரங்களையும் அறிந்த கொள்ள இப்பதிவேட்டில் பதிவு செய்யலாம். வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் முகாம்களுக்கு செல்லும்போது, வேளாண் விரிவாக்க மைய கிடங்கு மேலாளரிடம் பதிவேடு ஒப்படைக்கப்பட்டு பதிவு செய்யப்படும். பதிவு செய்யும் குறைகளுக்கு உடனடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ தகவல் தெரிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இயற்கை எரிவாயு கண்டுபிடிப்பு**

திருப்புல்லாணி : ""திருப்புல்லாணி அருகே பூமிக்கடியில் இயற்கை எரிவாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, குழாய் பதிக்கும் பணி விரைவில் நடைபெறும்," என, ஓ.என்.ஜி.சி.,அதிகாரி தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோர பகுதிகளில் இயற்கை எரிவாயு கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டதால் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தப்படுகிறது. தாமரைக்குளம், ஆற்றாங்கரை, பனைக்குளம்,பெரியபட்டணம்,இருமேனி போன்ற இடங்களில் ராட்சத இயந்திரங்களின் உதவியுடன் பூமியை துளையிட்டு எரிவாயு சோதனை நடத்தினர்.இந்த சோதனையில் எதிர்பார்த்தளவு பூமிக்குள் எரிவாயு இல்லாததால் திட்டம் கைவிடப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன் திருப்புல் லாணி அருகே நடத்திய சோதனையில் அங்கு எரிவாயு அதிகமாக இருப்பதை கண்டுபிடித்தனர்.இதை தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஆயத்தப்பணிகள் நடைபெறுகிறது. அங்கிருந்து தெற்குகாட்டூரில் உள்ள ஓ.என்.ஜி.சி.,சேமிப்பு கிடங்கிற்கு குழாய்கள் மூலம் எரிவாயு கொண்டு செல்லப்பட்டு, சுத்திகரிப்பு செய்வதற்காக கெயில் நிறுவனத்திற்கு வழங்கப்படும்.இதற்கான பணி விரைவில் துவங்க உள்ளது என ஓ.என்.ஜி.சி.,அதிகாரி தெரிவித்தார்.

**உப்பு விலை சரிவால் விற்பனையில் முடக்கம்**

திருப்புல்லாணி : உப்பு விலையில் ஏற்பட்ட சரிவை தொடர்ந்து திருப்புல் லாணி அருகே உப்பு குவியல் மலை போல் காணப்படுகிறது.

திருப்புல்லாணி அருகே பல்வேறு இடங்களில் உப்பளங்கள் உள்ளது. இங்கு உற்பத்தியாகும் உப்பு சமையலுக்கு பயன்படுத்தமுடியாது.உரம்,சோப் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.கடந்த ஆண்டுகளில் ஒரு டன் உப்பு 800 ரூபாய் முதல் ஆயிரம் வரை விற்பனையானது.நடப்பாண்டில் டன் 400 ரூபாயாக குறைந்தது.

இதனால் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு விற்பனை செய்யமுடியாமல் உற்பத்தியாளர்கள் நல்ல விலையை எதிர்நோக்கி குவித்து வைத்துள்ளனர். உப்பளத்தில் நூற்றுக்கணக்கான டன் தேங்கிய நிலையிலும் பாத்திகள் சேதமாவதை தடுக்க உற்பத்தி பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

**மரங்கள் கடத்தப்படுவதை தடுக்க மர அறுவை ஆலையில் ஆய்வு : வெப்பமயமாவதை தடுக்க நடவடிக்கை**

ராமநாதபுரம் : தென்மாவட்ட வனப்பகுதியின் மரங்கள் கடத்தப்படுவதை தடுக்க மர அறுவை மில்களில் ஆய்வு நடந்து வருகிறது.

தென்மாவட்டத்தில் சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல் மாவட்டங்களில் வனப்பகுதிகள் நிறைய உள்ளன. காடுகளில் உள்ள அடர்த்தியை பயன்படுத்தி தொடர்ந்து அங்குள்ள மரங்கள் கடத்தப்படுகின்றன. புவி வெப்பமயமாகி வரும் சூழலில் , அதிகமான மரங்கள் வளர்க்க ஆய்வாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் வனப்பகுதியில் உள்ள மரங்கள் கொள்ளை மேலும் பாதகம் விளைவிக்கும். இதை தடுக்கும் விதமாக, மரக்கடத்தலை முடிவுக்கு கொண்டு வர வனபாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஜரூராக களமிறங்கியுள்ளது.

முதற்கட்டமாக கடத்தல் மரங்கள் கரைசேரும் மரஅறுவை மில்களில் ஆய்வு நடத்தப்பட உள்ளது. அறுவை மில்லின் பதிவு, பெறப்படும் மரங்களின் விபரம் போன்றவை இந்த ஆய்வில் பார்வையிடப்படும். மேலும் மரங்கள் சப்ளை செய்பவர்கள் பற்றிய விபரங்களும் திரட்டப்பட உள்ளது. சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகரில் இதற்கான பணியை கண்காணிப்பு பிரிவு தொடங்கி உள்ளது.

வனபாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் விருதுநகர் சரக உதவி வனபாதுகாவலர் வடிவேல் கூறியதாவது: கடத்தல் மரங்கள் சில அறுவை மில்களுக்கு செல்வதாக தகவல் கிடைத்துள்ளது. இதை தடுக்கும் விதமாக ஒட்டுமொத்தமாக மர அறுவை மில்களில் ஆய்வு நடத்த உள்ளோம். இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கியுள்ளது, என்றார்.

**இருப்பு கொப்பரை விற்பனை செய்ய "நேபட்' விலை நிர்ணயம்**

பொள்ளாச்சி: விவசாயிகளிடம் இருந்து அரசு கொள்முதல் செய்து இருப்பு வைத்துள்ள கொப்பரையை, எண்ணெய் ஆலைகளுக்கு விற்பனை செய்ய "நேபட்' அதிகாரிகள் கிலோவுக்கு 35.30 ரூபாய் விலை நிர்ணயம் செய்துள்ளனர். இதனால், வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தேங்காய் விலை சரிவை தடுத்து, தென்னை விவசாயிகளை காப்பாற்ற மத்திய அரசு கொப்பரை கொள்முதலுக்கு ஆதரவு விலை நிர்ணயத்துள்ளது. மத்திய அரசின் "நேபட்' நிறுவனமும், தமிழக அரசின் "டான்பேட்' நிறுவனமும் இணைந்து கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் கொப்பரை கொள்முதல் செய்கிறது. தமிழகத்தில் பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், தாராபுரம், பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் கொப்பரை கொள்முதல் செய்யப் பட்டது. "நேபட்' நிறுவனம் அறிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒரு கிலோ 44.50 ரூபாய்க்கு கடந்தாண்டு கொள்முதல் செய்யப்பட்டது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு கொள்முதல் மையத்தில் மொத்தம் 22 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது. மாநிலம் முழுவதும் சேர்த்து 30 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கொப்பரை கொள்முதல் செய்து இருப்பு வைக்க இடம் இல்லாததால், அரசு சேமிப்பு கிடங்குகளில் இருப்பில் உள்ள கொப்பரையை உடனடியாக விற்பனை செய்ய "நேபட்' நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதனால், மாநிலம் முழுவதும் உள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகளுக்கு "நேபட்' நிறுவனம் சார்பில் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பில் உள்ள கொப்பரை கிலோவுக்கு 35.30 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. அரசு கொள்முதல் செய்த முதல்தர கொப்பரை விற்பனை செய்யப் பட்டால், வெளிமார்க்கெட்டில் கொப்பரை வர்த்தகம் பாதிக்கும். இதனால், தேங்காய், கொப்பரை, தேங்காய் எண்ணெய் விலை சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறியதாவது: கடந்த ஆண்டில் கொப்பரைக்கு

கிராக்கி ஏற்பட்ட நேரத்திலும் வெளிமார்க்கெட்டில் விலை உயரவில்லை. இதனால் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை.

தற்போது அரசு கொள்முதல் வேகப்படுத்தப்படாததால் வெளிமார்க்கெட்டில் விலை உயராமல் உள்ளது. வெளிமார்க்கெட்டை நாடியிருக்கும் தேங்காய் எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிக்கும் விலைக்கு கொப்பரை விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், அரசு கொள்முதல் செய்த கொப்பரையை விற்பனை செய்ய அறிவித்துள்ளனர். தேங்காய் எண்ணெய் நிறுவனங்கள் அந்த கொப்பரையை வாங்கினால் வெளிமார்க்கெட்டில் விலை சரிந்து விடும். இதை அரசு சரிக்கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக இருப்பில் உள்ள கொப்பரையை முழுமையாக விற்பனை செய்யாமல் மார்க்கெட் சூடுபிடிக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

சென்னை மண்டல "நேபட்' அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் 133.5 கோடி ரூபாய் மதிப்புள்ள 30 டன் கொப்பரை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த கொப்பரை கொள்முதல் செய்து ஓராண்டாகிவிட்டதால், கெட்டுப்போகாமல் இருக்க விற்பனை செய்யப்படுகிறது. அதற்கு கிலோவுக்கு 35.30 விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இருப்பில் உள்ள கொப்பரை விற்பனை செய்யப்பட்டால் தான் இந்த ஆண்டுக்கான கொப்பரை கொள்முதல் வேகப்படுத்தப்படும்' என்றனர்.

**பருவ மழையால் கொப்பரை உற்பத்தி பாதிப்பு! காங்கேயத்தை நாடும் உற்பத்தியாளர்கள்**

பொள்ளாச்சி: கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கியுள்ளதால், கொப்பரை உற்பத்தி தடைபட்டு வெளிமார்க்கெட்டில் கிராக்கி நிலவுகிறது. இதனால், பொள்ளாச்சி மற்றும் நெகமம் பகுதியிலுள்ள கொப்பரை உற்பத்தியாளர்கள் தேங்காயை காங்கேயத்திற்கு கொண்டு சென்று உற்பத்தி செய்கின்றனர்.

கோவை மாவட்டத்தில் தற்போது 43 ஆயிரம் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தினமும் நான்கு கோடி தேங்காய்கள் உற்பத்தியாகின்றன. இதில், 60 சதவீத தேங்காய் கொப்பரை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் பவுடர் உற்பத்திக்கு 10 சதவீதமும், உணவு தேவைக்கும், வடமாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்கு 30 சதவீதமும் தேங்காய் கொண்டு செல்லப்படுகிறது. தமிழகத்தில் கடந்த மார்ச் மாதத்தில் தேங்காய் சீசன் துவங்கினாலும், இந்தாண்டு தேங்காய் உற்பத்தி குறைவாக உள்ளது. ஆனாலும்,

வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததால் மார்க்கெட் மந்தமாக உள்ளது. கடந்த ஏப்ரல் 14ம் தேதி முதல் அரசு கொப்பரை கொள்முதல் துவங்கப்பட்டாலும், கொள்முதல் விறுவிறுப்படையவில்லை.

இந்நிலையில் இரு வாரங்களாக தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கியுள்ளதால் தேங்காய் பறிப்பது, கொப் பரை தயாரிப்பது ஆகியவை முழுமையாக ஸ்தம்பித்துள்ளன. கோவை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்வதால் கொப்பரை உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் தேங்காய் முழுவதும் வெள்ளகோவில், காங்கேயம் பகுதியில் உள்ள உலர்களங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கொப்பரை உற்பத்தி தடைபட்டு, கிராக்கி நிலவினாலும் வெளிமார்க்கெட்டில் விலை உயரவில்லை. தற்போது வெளிமார்க்கெட்டில் கொப் பரை கிலோவுக்கு 33 ரூபாய் அதிகபட்சமாக விலை கிடைக்கிறது.கொப்பரை உற்பத்தியாளர் கூறுகையில், "கோவை, திருப்பூர் மாவட்டங்களில் பெரியபட்டி, செஞ்சேரிமலை, உடுமலை, ஆனைமலை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, ஆலாந்துரை, தொண்டாமுத்தூர், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட உலர்களங்களில் மழை காரணமாக கொப்பரை உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதனால், தினமும் 200 லோடு கொப்பரை உடைப்புக்காக காங்கேயம் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இன்னும் இரண்டு மாதங்களுக்கு கோவை மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேங்காய் முழுவதும் வெள்ளகோவில், காங்கேயம் பகுதிக்கு கொண்டு சென்று கொப்பரையாக்கப்படும்' என்றார்.

**தொழிலாளர்கள் வேலையிழப்பு**! பொள்ளாச்சி பகுதியில் உற்பத்தியாகும் தேங்காயை காங்கேயம், வெள்ளக்கோவில், முத்தூர், ஊத்துக்குளி பகுதிகளில் உள்ள இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கொப்பரை உலர் களங்களுக்கு கொண்டு செல்கின்றனர். கொப்பரை உற்பத்தியாளர் கள் காங்கேயம் பகுதிகளில் உலர் களங்களை வாடகைக்கு பிடித்து அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்றனர். இதனால் பொள்ளாச்சி பகுதியில் தேங்காய் உடைப்பு, கொப்பரை உலர வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்ற கடைகளின் லைசென்ஸ் ரத்து...கேரள மாநிலத்திற்கு உரங்கள் கடத்துவது அம்பலம்!**

தேனி: கேரள எஸ்டேட்களுக்கு உரங்களை விற்ற கடை உட்பட கூடுதல் விலைக்கு ரசாயன உரங்களை விற்ற ஏழு உரக்கடைகளின் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளன. முல்லை பெரியாற்றில் நீர் திறக்கப்படாததால் மாவட்டத்தில் முதல் போக சாகுபடியான குறுவை நெல் சாகுபடி தாமதமாகி வருகிறது. இந்நிலையில் விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் விதை நெல் தேவையான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அறிவித்துள்ளது. தற்போது கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நாற்றங்கால் தயாரிக்கும் பணி நடக்கிறது.மாவட்டத்தில் உரக்கடைகளில் 358.54 ரூபாய்க்கு விற்க வேண்டிய பேக்ட் 20க்கு 20 உரத்தை தனியார் உரக்கடைகளில் 430 ரூபாய்க்கும், 368.94 ரூபாய்க்கு விற்க வேண்டி ஸ்பிக் நிறுவனத்தின் அதே தயாரிப்பை 390 ரூபாய்க்கும் விற்று வந்தனர். இது குறித்த புகாரின் பேரில் விவசாயத்துறை அதிகாரிகள் கடைகளில் சோதனை நடத்தினர். கேரள எஸ்டேட்களுக்கு ஆறு டன் உரத்தை சப்ளை செய்த தேனியிலுள்ள பி.எஸ்.வேலுச்சாமி கவுடர் அன்ட் சன்ஸ், அதிக விலைக்கு உரம் விற்ற ரத்தினசாமி நாடார் உரக்கடை உட்பட மூன்று கடைகளின் லைசென்ஸ் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டது. இரண்டு கடைகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள் ளது. இதே போல் கம்பத்தில் மூன்று கடைகள், சின்னமனூரில் நான்கு கடைகளின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன. சின்னமனூரில் 2 கடைகளுக்கும், போடியில் ஒரு கடைக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள் ளது. உரம் அதிக விற்பனை செய்வது, கேரளா விற்கு உரம் கடத்துவது ஆகியவை குறித்து தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுக்க விவசாயத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

**முல்லைப் பெரியாறு பிரச்னை; விவசாயிகள் பேச்சுவார்த்தை..,**

கூடலூர்: பெரியாறு அணைப்பிரச்னை தொடர்பாக தமிழக விவசாயிகளை அழைத்து கேரள மக்கள் பேச்சு வார்த்தை நடத்தினர். பெரியாறு அணைப்பிரச்னை முடிவுக்கு வராத நிலையில் சுப்ரீம் கோர்ட் அமைத்த ஐவர் குழு நேற்று முன்தினம் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தி பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளது. இந்நிலையில், நேற்று தமிழக விவசாயிகளை அழைத்து கேரளாவில் உள்ள பாம்பனாறு என்ற இடத்தில் கேரள மக்கள் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் தமிழக விவசாயிகள் சார்பில் ஐந்து மாவட்ட விவசாய சங்க செயலாளர் கே.எம்.அப்பாஸ், பழனிவேல்ராஜன் கால்வாய் விவசாய சங்க தலைவர் ராமராஜ், தேவாரம் பேரூராட்சி தலைவர்

பெருமாள், விவசாய சங்க நிர்வாகி முத்தையா, கேரளாவில் உள்ள முல்லைப்பெரியாறு சமரச சமதியின் தலைவர் சி.பி.ராய், பொதுச்செயலாளர் ராபின், செயலாளர் ஷாஜி உட்பட 25 பேர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தமிழக விவசாயிகளின் கோரிக்கையை கேரள மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், கேரள மக்களின் பயத்தை போக்க புதிய அணை கட்டுவதே தீர்வு என்பதை கேரள தரப்பில் முன்வைத் துள்ளனர். அடுத்த கூட்டம் ஜூலை யில் கம்பத்தில் நடத்துவது என முடிவு செய்துள்ளனர்.

**கால்நடைகளுக்கு நோய் தாக்குதல் அதிகரிப்பு! ஆய்வாளர்கள் இல்லாததால் அவலம்...,**

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் கால்நடை ஆய்வாளர்கள் பற்றாக்குறையால் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாத நிலை நீடிக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தின் சராசரி மழையளவு 830 மி.மீ.,. இந்தாண்டு எதிர்பார்த்த மழை பெய்யாததால் ஆறு, கண்மாய், குளங்கள் வறண்டு விட்டன. கால்நடைகளுக்கு தீவன பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதால் பால் உற் பத்தி குறைந்துள்ளது.ஒரு புறம் தண்ணீர், தீவன பற்றாக்குறை இருந்தாலும், மறுபுறம் அதிக வெப் பத்தால் கால்நடைகளுக்கு நோய் தாக்கி வருகிறது. இவற்றை கட்டுப்படுத்த கிளை மருந்தகங்களில் ஆய்வாளர்கள் இல்லை. திண்டுக்கல் மாவட்டத்தில் 137 கால்நடை கிளை நிலையங்கள் உள்ளன. இவற்றில் 39ல் மட்டுமே ஆய்வாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் 3 முதல் 5 நிலையங்களுக்கு கூடுதல் பொறுப் பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் எந்த நிலையங்களுக்கும் முறையாக செல்ல முடியவில்லை. கால்நடை டாக்டர் ஒருவர் கூறியதாவது: தற்போது மாவட்டத்தில் ஆத்தூர், கோசுகுறிச்சி, செந்துரை, தருமத்துப்பட்டிக்கு 4 உதவி கால் நடை மருத்துவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். 114 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியில் உள்ளனர்.இவர்களில் விரைவில் பல்வேறு இடங்களில் நியமிக்கப் பட உள்ளனர்.நோய் தடுப்பு ஊசிகள் அனைத்து கால்நடைகளுக்கும் போடப் பட்டுள்ளது. என்றார்.

**செம்மை நெல் சாகுபடியில் மிஷின் மூலம் நடவு, திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியில் அறிமுகம்.,**

பழநி: திண்டுக்கல் மாவட்டத் தில் செம்மை நெல் சாகுபடி முறையில் மிஷின் மூலம் நடவு செய்யும் முறை பழநியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பழநி வேளாண்மை கோட்டத் தில் 16 ஆயிரம் ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கூலி தொழிலாளிகள் கிடைப்பதில் பிரச்னை இங்கும் உள்ளது. இதற்கு தீர்வாக மிஷின் மூலம் நடவு செய்வதில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். இம்முறையால் தாங்கள் பயனடைந்துள்ளதாக பாலசமுத்திரம்

விவசாயிகள் வேலுச்சாமி, பழனிச்சாமி கூறினர். அவர்கள் கூறுகையில், "கடந்த 20 ஆண்டுகளாக நெல் சாகுபடி செய்து வருகிறோம். வழக்கமாக நாற்று நடவு பணி துவங்கி களை எடுத்தல் போன்ற பணிக்கு கூலிதொழிலாளிகளை நியமித்தால் ஒரு ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரத்து 800 வரை செலவாகும். அதுவும் கட்டட வேலை, செங்கல் சூளை போன்ற பணிக்கு செல்வதால் ஆட்கள் கிடைப்பதில் சிரமம் இருந்தது. தற்போது இப்பிரச்Ø னக்கு விடிவு ஏற்பட்டது போல் அமைந்துள்ளது. மிஷின் மூலம் நடவு செய்வதால் ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரத்து 200 தான் செலவாகிறது. கூலியாட்கள் மூலம் நாள் ஒன்றுக்கு அதிகபட்சம் 5 ஏக்கர் நடவு செய்ய முடிந்தது(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை). தற்போது 6 முதல் 8 ஏக்கர் நடவு செய்கிறோம்(காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை). களை எடுத்தல், அடியுரமிடல் போன்ற பணியும் தற்போதில்லை. அனைத்து வகையிலும் மிஷின் மூலம் நடவு செய்தல் எங்களுக்கு பலன் தந்துள்ளது,'என்றனர். வேளாண்மை உதவி இயக்குனர்(பொறுப்பு) காளிமுத்து கூறுகையில்,"செம்மை நெல் சாகுபடி முறையில் திண்டுக்கல் மாவட்டத்தில் முதல் முறையாக மிஷின் மூலம் நடவு செய்யும் முறையை அறிமுகம் செய்துள்ளோம். இதற்கு பலன் கிடைத் துள்ளது. இக்கோட்டத்தில் 10 ஆயிரம் விவசாயிகள் உள் ளதாக கணக்கெடுக்கப் பட்டுள்ளது. அனைவரும் மிஷின் முறைக்கு மாற வாய்ப்புள்ளது. மிஷின் வாங்க மான்யம் தரும் பணியை வேளாண்மை பொறியியல் துறையினர் செய்து வருகின்றனர்,' என்றார்.

**சோழவந்தான் நெல்கொள்முதல் நிலையம் மூடல்,விவசாயிகள் சோகம்**

சோழவந்தான்: சோழவந்தானில் நெல்கொள்முதல் நிலையம் மீண்டும் திறக்க இப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். சோழவந்தான், பேட்டை, ஆண்டிமேடு, வடகரைகண்மாய், ரிஷபம், குருவித்துறை, நாச்சிக்குளம், விக்கிரமங்கலம் பகுதிகளில் கர்நாடகபொன்னி, செல்லப்பொன்னி, ஏ.டி.டி.,45 ஆகிய ரக நெல் பயிர்கள் பயிரிடுவது வழக்கம். விவசாயிகளின் நலன் கருதி சோழவந்தான் பேட்டை, விக்கிரமங்கலம் பகுதியில் அரசு நெல்கொள்முதல் நிலையம் சில ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது. அறுவடை காலத்தில் மட்டும் இந்த நிலையம் மூன்று ஊழியர்களுடன் செயல்படும். இந்தாண்டு ஜனவரியில் இருந்து ஏப்ரல் வரை செயல்பட்டது. அதன்பின் திடீரென கொள்முதல் நிலையம் மூடப்பட்டது. ஏற்கனவே பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். சிலர் கிணற்று பாசனத்தில் விவசாயம் செய்துள்ளனர். அறுவடைக்கான நாட்களும் நெருங்குகின்றன. இந்த நேரத்தில் கொள்முதல் நிலையம் மூடப்பட்டதால், வியாபாரிகளின் நெருக்கடிக்கு விவசாயிகள்

தள்ளப்படுகின்றனர். விவசாயிகள் அண்ணாத்துரை, பெரியசாமி,விருமாண்டிதேவர் கூறுகையில், " நிலையத்தில் ஒரு கிலோ 11 ரூபாய்க்கு நெல்கெள்முதல் செய்தனர். நிலையம் மூடப்பட்டதால் 66 கிலோ கொண்ட நெல் மூடை 550 ரூபாய் என குறைந்த விலையே வியாபாரிகள் தருகின்றனர். விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. அறுவடை நேரத்தில் நிலையம் மூடப்பட்டதால் வியாபாரிகளுக்கு சாதகமாக அதிகாரிகள் செயல்படுவதுபோல் உள்ளது' என கூறினர். சோழவந்தான் பகுதியில் கொள்முதல் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டால்தான் விவசாயிகளின் உழைப்பிற்கு பலன் கிட்டும்.

**விவசாயக் கணக்கெடுப்புக்கு தேவையான தகவல்கள்**

மதுரை: விவசாயிகள் குறித்த முழுமையான தகவல்கள் வேளாண் துறை மூலம் சேகரிக்கப்பட்டு, இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளன. விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள உதவி வேளாண் அலுவலர்களிடம் கீழ்க்கண்ட தகவல்களை தெரிவிக்க வேண்டும். பெயர், தந்தை பெயர், விவசாய நிலை, பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, ஜாதி, முகவரி, தாலுகா, பிர்கா, கிராமம், பஞ்சாயத்து, நிலம், மண்ணின் தன்மை, சர்வே, சப் சர்வே எண், பாசனத்தின் தன்மை, பயிர்களின் தன்மை, பருவப்பயிர்கள். வங்கிக் கணக்கு எண், வங்கியின் பெயர், விவசாயக் குழுவில் இணைந்திருந்தால் அதுகுறித்த தகவல், விவசாயம் சார்ந்த பிற தொழில்கள், மொத்த நிலம் ஆகியவற்றை வெள்ளைத்தாளில் எழுதி, உதவி வேளாண் அலுவலர்களிடம் தெரிவித்தால், உடனடியாக பதிவு செய்யப்படும், என வேளாண் உதவி இயக்குனர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

**ஐந்து கிலோ மாம்பழம் பேச்சிப்பாறையில் ஆய்வு**

மார்த்தாண்டம் : பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வு நடத்த சேகரித்த மாம்பழங்களில் 5 கிலோ எடை கொண்ட மாம்பழங்கள் கிடைத்துள்ளது.

பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் இடைப்பருவத்தில் காய்க்கும் மாங்காய் குறித்த ஆய்வு செய்வதற்கு பல இடங்களில் இருந்து மாம்பழங்கள் மற்றும் ஒட்டு செய்வதற்காக மாங்குச்சிகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதில் திருச்சியில் இருந்து கொண்டுவரப்பட்ட 5 கிலோ எடை கொண்ட தலையணைக்காச்சி என்னும் இனத்தை சேர்ந்த மாம்பழங்கள் இரண்டும் இதில் அடங்கும். ஒவ்வொன்றும் 45 செ.மீ., சுற்றளவும், 15 செ.மீ., அகலமும், 30 செ.மீ., நீளமும் கொண்டது. ஆய்வுக்காக தேர்வு செய்யப்பட்ட மாம்பழங்களில் 50 கிராம் எடை உடையதும் உண்டு.

முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் உடல் நலத்திற்கு ஏற்றது. இதனால் பண்டைய மன்னர்கள் மாம்பழத்தை அதிகம் விரும்பி சாப்பிட்டுள்ளனர். தலையணைக்காச்சி மாமரங்கள் காவனிப்பாரின்றி அழிந்து வருகிறது. இதனை மைசூர் மகாராஜாக்கள் பராமரித்து வந்தனர். இந்த வகை மாமரங்கள் திருச்சியில் ஒருசில பகுதியில் மட்டும் காணப்படுகிறது. இது நமது பகுதியில் உள்ள சீதோஷ்ண நிலையில் வளருமா என்பது குறித்தும், இடைப்பருவத்தில் காய்க்குமா என்பது குறித்தும் தோட்டக்கலையினர் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

**தென்னையில் மர்மநோய்: அதிகாரிகள் நேரடி ஆய்வு**

உடுமலை: சிக்கனூத்து பகுதியில் தென்னை மரங்களில் பரவி வரும் மர்மநோய் தாக்குதல் குறித்து தென்னை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் தோட்டங்களில் நேரடி ஆய்வு மற்றும் ஆலோசனை கூட்டம் நடத்தினர். உடுமலை அருகேயுள்ள சிக்கனூத்து மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடந்த சில மாதங்களாக தென்னை மரங்களில் பல்வேறு நோய்கள் பரவின. தென்னை மட்டைகளில் பச்சையம் குறைந்து செம்பழுப்பு நிறமாக மாறியதுடன், மட்டைகள் சத்து பற்றாக்குறையால் கீழே விழ துவங் கின. நோய் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடம் இல்லாத நிலையில் மர்மநோய் வேகமாக பரவியது. குறுகிய நாட்களில் 200 ஏக்கர் வரை மர்மநோய் பரவியதால் விவசாயிகளிடையே பீதி ஏற்பட்டது. மர்மநோய் தாக்குதல் குறித்து ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய துறை தலைவர் ராஜமாணிக்கம், வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகள் அடங்கிய குழுவினர் சிக்கனூத்து பகுதியில் நேரடி ஆய்வில் ஈடுபட்டனர். ஆய்வில் இப்பகுதியிலுள்ள தென்னை மரங்களில் கருந்தலைப்புழு தாக்குதல் அதிகளவு இருந்தது கண்டறியப்பட்டது. தொடர்ந்து, விவசாயிகளுக்கு நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில், ஆராய்ச்சி நிலைய முனைவர் ஜொனாதன் உட்பட பலர் ஆலோசனை வழங்கினர்.

**கருவேல மரங்களாக காட்சி தரும் மாணிக்காபுரம் குளம்: தண்ணீருக்கு தவிக்கும் நொய்யல் கரை கிராமங்கள்**

திருப்பூர்: ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பாசன ஆதாரமாக இருந்த மாணிக்காபுரம் குளம், இன்று வனாந்திரமாக மாறியுள்ளது. குளத்தில் தண்ணீரை தேக்கி, நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

நொய்யல் கரையை ஒட்டியுள்ள ஊராட்சிகளில், வறட்சியான ஊராட்சியாக இருப்பது முதலிபாளையம். சிட்கோ, தாட்கோ, ஹவுசிங் யூனிட் உள்ளிட்ட முக்கிய இடங்களை உள்ளடக்கியுள்ள இந்த ஊராட்சி விவசாயத் தொழிலை மட்டுமே நம்பியிருந்தது. ஆனால், நிலத் தடி நீர்மட்டம் குறைந்து, விவசாய நிலங்கள் எல்லாம் வானம் பார்த்த பூமியாக மாறிவிட்டன. திருப்பூர்ரைச் சுற்றியுள்ள ஊராட்சிகளில் புதிய குடியிருப்புகள் புற்றீசல் போல் பெருகி வருகின்றன. ஆனால், முதலிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போதிய தண்ணீர் வசதியிருக்காது என்பதால், அமைக் கப்பட்ட லே-அவுட்களும் போணியாகவில்லை. இதனால், இம்முயற்சியும் கைவிடப் பட்டன. முதலிபாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட குக்கிராமங்கள், 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை போதிய நீராதாரத்தோடு இருந்தன.

முக்கிய பாசன நீராதாரமாகவும், நிலத்தடி நீர் ஆதாரமாகவும் விளங்கிய மாணிக்காபுரம் குளம் வற்றியதில் இருந்தே, அனைத்து பிரச்னையும் ஆரம்பித்து விட்டன. காசிபாளையம் அணையில் இருந்து செல்லும் ராஜவாய்க் கால் வழியாக ஆற்று நீர் சென்று, 120 ஏக்கர் பரப்பளவு கொண்ட குளத்தை நிரப்பியது. ஆரம்ப காலம் முதல் ஷட்டர் அமைக்கப் பட்டு, போதிய தண்ணீர் இருக்கும் போது, பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. நொய்யல் ஆற்றில் சாயக்கழிவுநீர் செல்லத் துவங்கியபோது, காசிபாளையம் அணை உடைக் கப்பட்டது. அந்த நாள் முதல், குளத்துக்கு தண்ணீர் வருவது தடைபட்டது. இதனால், வறண்டு கிடந்த குளத்தில் முட்செடிகள் முளைத்து, இன்று பெரிய வனாந்தரம் போல் காட்சியளிக்கிறது. திருப்பூர் பொதுப்பணித்துறை எல்லை முடிந்து, காங்கயம் பொதுப்பணித்துறை எல்லை துவக்கத்தில் இக்குளம் இருப்பதால், இருதரப்பினரும் கண்டுகொள்ளவில்லை. ஊராட்சி சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும் பலமுறை விண்ணப் பித்தும் நடவடிக்கை எதுவுமில்லை.

திருப்பூர் நகரைச் சுற்றியுள்ள குளங்களில் சிறப்பு கவனம் செலுத்தி, நீராதாரத்தை பெருக்க முனைந்துள்ள மாவட்ட நிர்வாகம், மாணிக்காபுரம் குளத்திற் கும் நொய்யல் நீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். சாயக்கழிவு நீரும், கழிவு நீர் செல்வது தொடர்ந்தாலும், காசிபாளையம் அணையில் ஏற்பட் டுள்ள சிறிய உடைப்பை சரி செய்து, அங்கு ஷட்டர் பொருத் தும்போது, குளத்திற்கு கழிவுநீர் செல்வதை தடுக்க முடியும். மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது, ஷட்டரை மூடி வைத்தால், குளத்துக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல முடியும். இதனால், முதலிபாளையம் சுற்றுப்பகுதி முழுவதும் பயனடையும். பொதுப்பணித்துறை அனுமதி பெற்று, தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களை கொண்டு, ராஜவாய்க்கால் மற்றும் குளத்தை

சீரமைக்கும் பணியை மேற்கொண்டால், வேலை உறுதி திட்ட பயனாளிகள் பயனடைவார்கள். மாவட்ட நிர்வாகம் சம்பந்தப் பட்ட குளத்தை ஆய்வு செய்து, காங்கயம் பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் கலந்துபேசி, விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## *ஆந்திரா–கர்நாடக மாநில அரசுகள் தமிழ்நாட்டுக்கு அரிசி கொண்டுவரும் தடையை நீக்கியது அரிசிவிலை மூட்டைக்கு ரூ.100 குறைந்தது*

*சென்னை, ஜூன்.17–*
*தமிழ்நாட்டுக்கு அரிசி கொண்டுவர ஆந்திரா, கர்நாடக மாநில அரசுகள் தடையை நீக்கியதால் தமிழ்நாட்டில் அரிசி மூட்டைக்கு ரூ.100 குறைந்தது.*

*அரிசிக்கு தடை நீங்கியது*

*கர்நாடக, ஆந்திர மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு அரசி கொண்டுவர அந்த மாநில அரசுகள் கடந்த ஒரு ஆண்டுக்கு மேல் தடை விதித்திருந்தது. இதன் காரணமாக தமிழ்நாட்டிற்கு மிகவும் குறைந்த அளவிலே அரிசி வந்துகொண்டிருந்தது.*

*இந்த நிலையில் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதற்காக கர்நாடக, ஆந்திர மாநில அரசுகள் தமிழ்நாட்டிற்கு அரிசி கொண்டுசெல்வதற்கு விதித்திருந்த தடையை நீக்கியது.*

*இந்த தடை நீக்கப்பட்டு 15 நாட்கள் ஆகிவிட்டன. இதனால் ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் இருந்து சென்னைக்கு தினமும் 300 லாரிகளில் வந்துகொண்டிருந்த நெல் இப்போது 500 லாரியாக உயர்ந்துள்ளது. மேலும் தமிழ்நாட்டில் அனைத்து மாநிலங்களிலும் நெல் அறுவடை நடந்துவருகிறது. இதனால் தமிழ்நாட்டில் அரிசி விலை மூட்டைக்கு ரூ.100–ம், கிலோவுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரையும் குறைந்துள்ளது என்று அரிசி மொத்த வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.*

*மூட்டைக்கு ரூ.100 குறைந்தது*

*75 கிலோ மோட்டா ரக அரிசி மூட்டை கடந்த வாரம் ரூ.1,200–க்கு விற்பனையானது, தற்போது ரூ.1,100 ஆகவும், 75 கிலோ சிகப்பு பொன்னி அரிசி மூட்டை ரூ.1,350–க்கு விற்பனையானது ரூ.1,250 ஆகவும், ரூபானி பொன்னி அரிசி 75 கிலோ மூட்டை ரூ.1,400–க்கு விற்பனையானது ரூ.1,300 ஆகவும், 75 கிலோ மூட்டை அதிசய பொன்னி ரூ.1,500–க்கு விற்பனையானது ரூ.1,400 ஆகவும், 75 கிலோ மூட்டை பாபட்லா பொன்னி அரிசி ரூ.1,600–க்கு விற்பனையானது ரூ.1,500 ஆகவும், 75 கிலோ மூட்டை முதல் ரக வெள்ளை பொன்னி அரிசி ரூ.2,600–க்கு விற்பனையானது ரூ.2,400 ஆகவும், இரண்டாவது ரக 75 கிலோ மூட்டை வெள்ளை பொன்னி அரிசி ரூ.2,400–க்கு விற்பனையானது, ரூ.2,200 ஆகவும் குறைந்துள்ளது.*

*வெள்ளை பொன்னி அரிசி*

*இட்லி அரிசி 75 கிலோ மூட்டை ரூ.1,450–க்கு விற்பனையாது ரூ.1,350 ஆக சரிந்துள்ளது. 50 கிலோ மூட்டை பொன்னி பச்சரிசி புதுசு ரூ.1,400–க்கு விற்பனையானது ரூ.1,300 ஆகவும், 50 கிலோ மூட்டை பழைய பொன்னி பச்சரிசி ரூ.1,700–க்கு விற்பனையானது ரூ.1600 ஆகவும் குறைந்துள்ளது.*

*25 கிலோ மூட்டை சிகப்பு பொன்னி அரிசி ரூ.500–க்கு விற்பனையானது, ரூ.450 ஆகவும், 25 கிலோ மூட்டை அதிசய பொன்னி அரிசி ரூ.500–க்கு விற்பனையானது ரூ.450 ஆகவும், 25 கிலோ மூட்டை அதிசய பொன்னி ரூ.550–க்கு விற்பனையாது ரூ.500 ஆகவும், 25 கிலோ மூட்டை பாபட்லா பொன்னி அரசி ரூ.650–க்கு விற்பனையானது ரூ.600 ஆகவும், 25 கிலோ மூட்டை முதல் ரக வெள்ளை பொன்னி ரூ.850–க்கு விற்பனையானது ரூ.800 ஆகவும், இரண்டாவது ரக வெள்ளை பொன்னி அரிசி 25 கிலோ மூட்டை ரூ.800–க்கு விற்பனையானது, ரூ.750 ஆகவும் குறைந்துள்ளது என்று அரிசி மொத்த வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.*

# வேளாண்மை செய்திகள்



### வேளாண் நிலங்களில்

## சிறு குறிஞ்சான் மூலிகை சாகுபடி

நம் நாட்டின் பண்டைய மருத்துவமுறைகளில் மூலிகை தாவரங்கள் அதிக அளவில் பயன்படுத்த தொடங்கி, இன்றளவும் பயன்பாட்டில் உள்ளன. தற்போது மூலிகை வளம் மெல்லமெல்ல அழிந்து வருவதாலும், தேவை பெருகுவதாலும் அரியவகை மூலிகை தாவரங்களை பாதுகாக்கவும் வேளாண் நிலங்களில் மூலிகை சாகுபடி அவசியமாகிறது.

### சிறு குறிஞ்சான் மூலிகை

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் ஒன்றான நீரழிவு நோய்க்கு மருந்தாக சிறு குறிஞ்சான் மூலிகை கொடி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த கொடிக்கு சர்க்கரையை குறைக்கும் தன்மை உள்ளதால் சர்க்கரை கொல்லி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. பல்வேறு நாடுகளில் சித்த, யுனானி மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த கொடி கடல் மட்டத்தில் இருந்து 600 மீட்டர் வரையுள்ள வெப்பம் மற்றும் மிதவெப்ப மண்டல பகுதிகளில் செம்மணல், கருமண் ஆகியவற்றில் நன்கு வளரக்கூடியது. பல்வேறு விதமான மண் மற்றும் சூழ்நிலைகளில் சாகுபடி செய்யலாம். இந்தியாவின் வடமாநிலங்களிலும், தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட தென் மாநிலங்களிலும் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

### சாகுபடி முறைகள்

சிறு குறிஞ்சான் மூலிகை கொடி படர்ந்து வளரும் தன்மை கொண்ட பசுமை மாறாத தாவரம். பருவமழை மாதங்களான ஜூன்-ஜூலை மாதங்களில் நடவுக்கு நடவுக்கு ஏற்றது. சாகுபடி நிலத்தை நன்கு உழுது, சமன்படுத்தி, 1 கன அடி அளவுள்ள குழிகள் எடுக்க வேண்டும். குழி எடுத்து 15 நாட்கள் அப்படியே விட்டு வைக்க வேண்டும். அதனால் நுண்ணுயிர் கிருமிகள் இல்லாமல் நடவு செய்ய முடியும்.

குழிகளை மக்கிய இலை, மேல் மண், தொழு உரம், கலவை கொண்டு நிரப்ப வேண்டும். செடிக்கு செடி 1½ அடி இடைவெளி போதுமானது. இது படரும் கொடி என்பதால் படர்வதற்கு ஏற்ற பற்றுநிலைகளை அமைக்க வேண்டும். மூங்கில், சவுக்கு பூட்டுகளை நட்டு கயிறு கட்டியும் பற்றுநிலைகளை அமைக்கலாம்.

### ஊடுபயிராக.......

சிறு குறிஞ்சான் மூலிகை கொடியை தனியாகவும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்யலாம். தோப்புகளிலும், வயல் மற்றும் வேலி ஓரங்களில் பயிரிடலாம். ஊடுபயிராக சாகுபடி செய்தால் செலவு ஏதுமின்றி உபரி வருமானம் பெறலாம். நடவு செய்த பின்பும், உரமிட்ட பின்பும் உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும். மருத்துவ பொருளாக பயன்படுத்தப்படுவதால் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

வாரத்துக்கு 1 முறை நீர்ப்பாய்ச்சினால் போதும். அதிகப்பாசனம் தேவையில்லை. கோடை காலத்தில் தேவைக்கு ஏற்ப நீர் பாய்ச்ச வேண்டும். இந்த கொடியை பச்சை ஈ, இலைப்பேன், சிலந்தி பூச்சிகள் அதிக அளவில் தாக்குகின்றன. இதற்கு பூச்சி கொல்லிகளை தெளிப்பதை தவிர்த்து, வேம்புச் சாறு, வேப்பங்கொட்டை வடிநீர் அல்லது புகையிலை கசாயம் ஆகிய ஏதேனும் ஒன்றை தெளிக்க வேண்டும்.

### பயன்கள்


ஜூன்-ஜூலை மாதங்களில் சிறு குறிஞ்சான் பூக்க தொடங்கும் காலமே அறுவடைக்கு ஏற்றகாலமாகும். இலைகள் பறிக்கும்போது கொடிகள் அறுந்துவிடாமல் கவனமாக பறித்து எடுக்க வேண்டும். இலைகளை உலர்ந்த சுத்தமான தரையில், பாலித்தீன் காகிதத்தை பரப்பி உலரவிட வேண்டும். நன்கு பராமரித்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து அறுவடை செய்து பயன்பெறலாம். 1 செடியில் இருந்து 3 கிலோ வரை இலை பறிக்கலாம்.

இந்த கொடி, உடல் திசுக்களை சுருங்க வைக்கவும், வெப்பமுட்டியாகவும், மனச்சோர்வு நீக்கியாகவும், சிறுநீர் வெளியேற்றவும், வலி நிவாரணியாகவும், எலும்புமுறிவுக்கும், காமாலை நோய்க்கும், விஷ முறியாகவும், இருமல் மருந்தாகவும், நீர்க்கடுப்பை போக்கவும், சிறுநீர் கற்களை போக்கவும், வெண் தேமலை போக்கவும், நீரழிவு நோயை கட்டுப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகிறது.

**-தகவல்: சந்திரசேகரன், சரவணன், புவனேஷ்வரன், வன மரபியல்-மரபெருக்கு நிறுவனம், கோவை.**

## அறுவடை செய்த உருளைக்கிழங்கை உடனடியாக விற்பது நல்லது

### விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை



உலகில் தானியமல்லாத உணவுப் பொருள் வரிசையில் உருளை கிழங்கு முதலிடம் வகிக்கிறது. கடந்த ஆண்டு உலக அளவில் 18.19 மில்லியன் ஹெக்டேரில் இருந்து 314 மில்லியன் டன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. உலக அளவில் சீன நாடு 18 சதவீத உருளை கிழங்கை உற்பத்தி செய்து உற்பத்தியாளர் வரிசையில் முதலிடம் வகிக்கிறது. அதை தொடர்ந்து இந்தியா 11 சதவீதமும், ரஷ்யா 9 சதவீதமும், உக்ரைன், அமெரிக்கா தலா 6 சதவீதமும், போலந்து, பெலாரஸ் ஆகிய நாடுகள் முறையே 3 சதவீதமும் உருளைக் கிழங்கை உற்பத்தி செய்கின்றன.

### உருளைக் கிழங்கு உற்பத்தி

தேசிய தோட்டக்கலை மற்றும் வளர்ச்சி மையத்தின் ஆய்வின்படி இந்தியா கடந்த ஆண்டில் 32.73 மில்லியன் டன் உருளைக்கிழங்கை 18.84 லட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்தது. இது கடந்த 2008-ம் ஆண்டைக் காட்டிலும் 4 சதவீதம் கூடுதலாகும். இந்தியாவின் உற்பத்தியில் உத்திரப்பிரதேசம் 42 சதவீதமும், மேற்கு வங்காளம் 25 சதவீதமும், பஞ்சாப், குஜராத், பீகார் ஆகிய மாநிலங்கள் முறையே 5 சதவீதமும், மத்தியபிரதேசம் 4 சதவீதமும், அஸ்ஸாம் 3 சதவீதமும் உருளைக் கிழங்கை உற்பத்தி செய்கின்றன.

தமிழகத்தை பொறுத்தவரை நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளில் உருளைக் கிழங்கு அதிகமாக விளைவிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் உருளை கிழங்கு நீர்போகம், கார்போகம் மற்றும் கடை போகம் என்ற 3 போகங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. வர்த்தக மூலங்களின் படி இந்தியாவில் 95 சதவீத உருளைக் கிழங்கு ரபி பருவத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

### மண்டிகள்

இந்தியாவின் உருளைக் கிழங்கு சந்தைகளில் மேட்டுப்பாளையம் சந்தையும் முக்கிய ஒன்றாகும். நீலகிரி கூட்டுறவு சங்கம் மற்றும் 100-க்கும் மேற்பட்ட தனியார் விற்பனை மண்டிகள் மேட்டுப்பாளையத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த மண்டிகளில் ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரை உருளைக் கிழங்கின் வரத்து அதிகமாக இருக்கும். தற்போது விவசாயிகள் நீர்போக உருளைக் கிழங்கை அறுவடை செய்து வருகின்றனர். அவர்கள் அதனை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைப்பதா அதன் மூலம் நல்ல விலை கிடைக்கும் போது விற்கலாமா என்ற குழப்பத்தில் உள்ளனர்.

விவசாயிகளுக்கு விடை அளிக்கும் விதத்தில் வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய தினசரி உருளைக் கிழங்கு விலைகளை கடந்த 1990-ம் ஆண்டில் இருந்து 2010-ம் ஆண்டு வரை பதிவு செய்து அவற்றை ஆய்வு செய்தது. மேலும் சந்தை நிலவரங்களும் விலை ஏற்றத்தாழ்வுகளும் ஆய்வு செய்யப்பட்டன.

### ஆய்வு

இந்த ஆய்வின்படி தற்போது அறுவடை செய்யும் நீர்போக உருளைக்கிழங்கு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 45 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு விவசாயிகளுக்கு ரூ.620 முதல் ரூ.700 வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்து உறுதி செய்து உள்ளது.

எனவே அறுவடை செய்த நீர்போக உருளைக்கிழங்கை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பது நல்லது என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.